**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT NO.II, ERODE**

**STC.NO. 445/2019**

**Deposition of Witness for: பு சா 1 குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**Date: 16.06.2026**

**(Complainant present and A1 absent. Petition filed and allowed for A1. A2 present)**

**Name: திரு. அந்தோணி ராஜ் த/பெ. வில்லியம் சார்லஸ்**

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி:**

5. வழக்கு காசோலை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு வங்கியில் இருந்து திருப்பப்பட்டதற்கு பின்னிட்டும் முதல் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால், சரிதான். வழக்கு காசோலையினை இரண்டாம் எதிரிதான் என்னிடம் வழங்கி இருந்தார் என்றால், சரியல்ல, இரண்டு எதிரிகளும் சேர்ந்து தான் கொடுத்தனர். முதல் எதிரி நேரடியாக வழக்குக் காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றால், சரியல்ல, முதல் எதிரி என்னிடம் கடன் கேட்டதற்கான ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்றால், சரிதான், ஆனால் வாய்மொழியாக தான் கேட்டார். வழக்கு கடன் வாங்கியது தொடர்பாக முதல் எதிரியினால் கொடுக்கப்பட்ட முதல் எதிரியினால் கையொப்பம் செய்த ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை என்றால், சரிதான். பு.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள சட்ட அறிவிப்பில் முதல் எதிரி கையொப்பம் செய்து காசோலை கொடுத்ததாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான்.

6. 1ம் எதிரிக்கு எதிரான எந்த ஒரு சங்கதியினையும் எனது வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிடவில்லை என்றால், சரியல்ல, இரண்டு எதிரிகளையும் குறிப்பிட்டு அனுப்பியுள்ளேன். கூட்டு வங்கி கணக்கு என்பதால் மட்டுமே 1ம் எதிரியையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. நான் வங்கி கணக்கு பராமரித்து வரும் நிலையிலும், பத்தாம் வகுப்பு வரை படித்துள்ள

NISHA C
Digitally signed by NISHA C
Date: 2026.06.16 17:08:33 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.II,Erode.

நிலையிலும், வங்கி பரிவர்த்தனை குறித்த விவரம் எனக்குத் தெரியும் என்றால், சரிதான். வழக்கு காசோலையில் 1 மற்றும் 2ம் எதிரிகளின் பெயர் அச்சிடப்பட்டுள்ளது என்பது எனக்குத் தெரியும் என்றால், சரிதான். வழக்கு காசோலையினை எதிரிகள் கொடுக்கும் பொழுது அதில் 1ம் எதிரியின் கையொப்பம் இல்லை என்பதை தெரிந்து கொண்டேனா என்றால், வழக்கு காசோலை கொடுக்கும் பொழுது அதில் ஒரு கையொப்பம் இருந்தது, அந்த கையொப்பம் மட்டும் இருந்தால் வசூலாகிவிடும் என எதிரிகள் சொன்ன காரணத்தினால் மேற்படி சங்கதி குறித்து நான் கேட்கவில்லை. வழக்கு காசோலை என்ன காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது என்றால், போதிய பணமில்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டுள்ளது.

7. 1ம் எதிரி வழக்கு காசோலையில் கையொப்பம் செய்யவில்லை என்ற விவரம் எனக்கு வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே தெரியும் என்றால், சரியல்ல. வழக்கு கடனை 1ம் எதிரி பெற்றார் என்பதற்கான ஆவணம் எதுவும் என்னிடம் இல்லை என்றால், சரிதான், ஆனால் இரண்டு எதிரிகளும் தான் பெற்றார்கள். வழக்கு காசாலைக்குரிய வங்கி கணக்கு கூட்டு கணக்கு என்பதை தவிர 1ம் எதிரி கடன் பெற்றார் என்பது தொடர்பான எந்தவித ஆவணமும் என்னிடம் இல்லை என்றால், சரிதான். எதிரிகள் எந்த தேதியில் என்னிடம் கடன் கேட்டார்கள் என்றால், 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் வாரத்தில் கேட்டார்கள். வழக்கு கடன் தொகை எனக்கு எந்த முறையில் கிடைக்கப்பெற்றது என்றால், சேமிப்புத் தொகையிலிருந்து எடுத்துக்கொடுத்தேன். வங்கியிலிருந்து எடுத்துக் கொடுத்தேனா என்றால், இல்லை, ரொக்கமாக வைத்திருந்த தொகையிலிருந்து எடுத்துக்கொடுத்தேன்.

8. எதிரிக்கும் எனக்கும் இடையே எந்தவித முந்தைய வரவு செலவும் இல்லை என்றால், சரியல்ல, இருந்தது. எத்தனை முறை வரவு செலவு இருந்தது என்றால், 20–க்கும் மேற்பட்ட முறை இருந்தது. எத்தனை வருடங்களாக வரவு செலவு இருந்தது என்றால், 2018 காலகட்டத்தில் இருந்து இருந்தது. எனது வருமானம் தொடர்பான ஆவணங்கள் எதையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான்.

NISHA C Digitally signed by NISHA C Date: 2026.06.16 17:08:10 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.II,Erode.

வழக்கு காசோலையினை எதிரிகள் எந்த ஆண்டு என்னிடம் கொடுத்தார்கள் என்றால், 2019 ஆம் ஆண்டாகும். முந்தைய வரவு செலவு தொடர்பாக எந்தவிதமான ஆவணங்களையும் நான் பெற்றுக் கொள்ளவில்லை என்றால், சரிதான். நானும் கேட்கவில்லை என்றால், சரிதான். முந்தைய வரவு செலவின் பொழுது எதிரி எவ்வளவு தொகையினை பெற்றார் என்றால், ரூ.50,000/- வரை இருக்கும். மேற்படி வரவு செலவின்பொழுது 1ம் எதிரியும் உடன் வந்துதான் கடன் பெற்றுச் செல்வாரா என்றால், இல்லை. எனக்கும் எதிரிக்கும் இடையே வங்கி பரிவர்த்தனை இருந்ததா என்றால், இருந்தது. எந்த காலகட்டத்தில் இருந்தது என்றால், 2018-2019 காலகட்டத்தில் இருந்தது.

9. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து வழக்குகளையும் ரூபாய் மூன்று லட்சம் தொகைக்கு தாக்கல் செய்துள்ள காரணத்தினால் இந்த வழக்கு பொய் வழக்கு என்றால், சரியல்ல. ரூ.10,000/-, ரூ.20,000/- என்ற குறைவான தொகைகளை கடனாக கொடுத்துவிட்டு வெற்றுக் காசோலைகளை பெற்று அதனை அதிக தொகைக்கு பூர்த்தி செய்து துர்லாபம் அடைவதை வேலையாக செய்து வருகிறேன் என்றால், சரியல்ல. எனக்கு எந்தவித வருமானமும் இல்லை என்றால், சரியல்ல. உண்மையிலேயே எனக்கு வருமானம் இருந்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், வருமானம் இல்லாத காரணத்தினால்தான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. வழக்கு கடன் தொகையினை எதிரிகளுக்கு கொடுக்கும் அளவிற்கு எனக்கு வருமான வசதி இல்லை என்றால், சரியல்ல. எனவே இந்த வழக்கு பொய் வழக்கு என்பதால் தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை:** இல்லை

Taken down before me in open court read over to the witness in the presence of accused. pleaded and admitted by him/her to be correct.

NISHA C
Digitally signed by NISHA C
Date: 2026.06.16 17:08:47 +0530

Judicial Magistrate,
Fast Track Court No.II,
Erode.